








श्रीमत् वेदान्त रामानुज मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् श्रीवास योगीश्वर गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रीरङ्गनाताह्वय मुनिकृपया प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् वेदान्त रामनुज मुनिमपरम् संश्रये देशिकेन्द्रम्



श्रीमत् श्रीवास योगीश्वर मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् वेदान्त रामानुज गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रुत्यन्त रामानुज यति नृपतेः प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् श्रीवास रामनुजमुनिं संश्रये ज्ञानवार्धिम्



वेदान्त लक्ष्मण मुनीन्द्र कृपात्त बोधम्
तत्पाद युग्म सरसीरुह भृङ्गराजम्
त्रय्यन्त युग्म कृतभूरि परिश्रमं तं
श्रीरङ्ग लक्ष्मणमुनिम् शरणं प्रपद्ये

# இராமானுச நூற்றந்தாதி

*irAmAnusa n-UTRan-dhAdhi*

# இராமாநுச நூற்றந்தாதி

தனியன்

### ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

प्रणामं लक्ष्मणमुनिः प्रतिगृह्णातु मामकम् ।
प्रसाधयति यत्सूक्तिः स्वाधीन पतिकाम् श्रुतिम् ॥

### ஸ்ரீ வேதப்பிரான்பட்டர் அருளிச்செய்த

முன்னை வினை அகல மூங்கிற் குடி அமுதன்
பொன்னம் கழற்கமலப் போதிரண்டும்
என்னுடைய சென்னிக்கணி ஆகச் சேர்த்தினேன்
தென்புலத்தார்க்கு என்னுக் கடவுடையேன் யான்

நயந்தரு பேரின்பம் எல்லாம் பழுதின்று நண்ணினர்பால்
சயந்தரு கீர்த்தி இராமானுச முனி தாள் இணைமேல்
உயர்ந்த குணத்துத் திருவரங்கத்து அமுது ஓங்கும் அன்பால் இயம்பும்
கலித்துறை அந்தாதி ஓத இசை நெஞ்சமே

### ஸ்ரீ சோமாசியாண்டான் அருளிச்செய்த

சொல்லின் தொகைகொண்டு உனதடிப் போதுக்குத் தொண்டு செய்யும்
நல்லன்பர் ஏத்தும் உன் நாமம் எல்லாம் என்றன் நாவினுள்ளே
அல்லும் பகலும் அமரும் படி நல்கு அறுசமயம் வெல்லும் பரம
இராமானுச இதென் விண்ணப்பமே

### ஸ்ரீ வேதப்பிரான்பட்டர் அருளிச்செய்த

இனியென் குறை நமக்கு எம்பெருமானார் திருநாமத்தால்
முனி தந்த நூற்றெட்டுச் சாவித் திரியென்னும் நுண்பொருளை
கனி தந்த செஞ்சொல் கலித்துறை அந்தாதி பாடித் தந்தான்
புனிதன் திருவரங்கத்து அமுதாகிய புண்ணியனே

## ஸ்ரீ திருவரங்க அமுதனார் அருளிச்செய்த இராமானுச நூற்றந்தாதி

# இராமாநுச நூற்றந்தாதி

*பூ மன்னு மாது பொருந்திய மார்பன்*
*புகழ் மலிந்த பா மன்னு மாறன்*
*அடி பணிந்துய்ந்தவன்*
*பல் கலையோர் தாம் மன்ன வந்த இராமனுசன்*
*சரணாரவிந்தம் நாம் மன்னி வாழ*
*நெஞ்சே சொல்லுவோம் அவன் நாமங்களே* [1] [3893]

*கள்ளார் பொழில் தென் அரங்கன்*
*கமலப் பதங்கள் நெஞ்சில் கொள்ளா*
*மனிசரை நீங்கி*
*குறையல் பிரான் அடிக்கீழ் விள்ளாத அன்பன் இராமானுசன்*
*மிக்க சீலமல்லால் உள்ளாதென் நெஞ்சு*
*ஒன்றறியேன் எனக்குற்ற பேரியல்வே* [2] [3894]

பேரியல் நெஞ்சே
அடி பணிந்தேன் உன்னை
பேய்ப் பிறவிப் பூரியரோடுள்ள சுற்றம் புலத்திப்
பொருவரும் சீர் ஆரியன் செம்மை இராமானுச முனிக்கன்பு செய்யும்
சீரிய பேறுடையார்
அடிக்கீழ் என்னைச் சேர்த்ததற்கே [3] [3895]

என்னைப் புவியில் ஒரு பொருள் ஆக்கி
மருள் சுரந்த முன்னைப் பழவினை
வேர் அறுத்து
ஊழி முதல்வனையே பன்னப் பணித்த இராமானுசன் பரன் பாதமும்
என் சென்னித் தரிக்க வைத்தான்
எனக்கேதும் சிதைவில்லையே [4] [3896]

எனக்குற்ற செல்வம் இராமானுசன் என்று
இசையகில்லா மனக் குற்ற மாந்தர்
பழிக்கில் புகழ்
அவன் மன்னிய சீர் தனக்குற்ற அன்பர் அவன் திருநாமங்கள் சாற்றும் என்பா
இனக் குற்றம் காணகில்லார்
பத்தி ஏய்ந்த இயல்விதென்றே [5] [3897]

இயலும் பொருளும் இசையத் தொடுத்து
ஈன் கவிகள் அன்பால்
மயல் கொண்டு வாழ்த்தும் இராமானுசனை
மதி இன்மையால் பயிலும் கவிகளில் பத்தி இல்லாத என் பாவி நெஞ்சால்
முயல்கின்றனன்
அவன் தன் பெரும் கீர்த்தி மொழிந்திடவே [6] [3898]

***மொழியைக் கடக்கும் பெரும் புகழான்***
***வஞ்ச முக்குறும்பாம் குழியைக் கடக்கும்***
***நம் கூரத்தாழ்வாண் சரண் கூடியபின்***
***பழியைக் கடத்தும் இராமானுசன் புகழ் பாடி***
***அல்லா வழியைக் கடத்தல்***
***எனக்கினி யாதும் வருத்தம் அன்றே*** [7] [3899]

வருத்தும் புறவிருள் மாற்ற
எம் பொய்கைப் பிரான் மறையின் குருத்தின் பொருளையும்
செந்தமிழ் தன்னையும் கூட்டி
ஒன்றத் திரித்தன்றெரித்த திருவிளக் கைத்தன் திருவுள்ளத்தே
இருத்தும் பரமன்
இராமானுசன் எம் இறையவனே [8] [3900]

இறைவனைக் காணும் இதயத்திருள் கெட
ஞானம் என்னும் நிறை விளக்கேற்றிய
பூதத் திருவடி தாள்கள்
நெஞ்சத்துறைய வைத்தாளும் இராமானுசன் புகழ் ஓதும் நல்லோர்
மறையினைக் காத்து
இந்த மண்ணகத்தே மன்ன வைப்பவரே [9] [3901]

மன்னிய பேரிருள் மாண்டபின்
கோவலுள் மா மலராள் தன்னொடு மாயனைக்
கண்டமை காட்டும்
தமிழ்த் தலைவன் பொன்னடி போற்றும் இராமானுசற்கு அன்பு பூண்டவர்தாள்
சென்னியில் சூடும்
திருவுடையார் என்றும் சீரியரே [10] [3902]

சீரிய நான்மறைச் செம்பொருள்
செந்தமிழால் அளித்த
பார் இயலும் புகழ்ப் பாண்பெருமாள்
சரணாம் பதுமத்தார் இயல் சென்னி இராமானுசன் தன்னைச் சார்ந்தவர் தம்
காரிய வண்மை
என்னால் சொல்லொணாது இக்கடல் இடத்தே [11] [3903]

இடம் கொண்ட கீர்த்தி மழிசைக்கு இறைவன்
இணையடிப்போது அடங்கும்
இதயத்து இராமானுசன்
அம் பொற் பாதம் என்றும் கடம் கொண்டிறைஞ்சும் திரு முனிவர்க்கன்றிக்
திடம் கொண்ட ஞானியர்க்கே [ காதல் செய்யாத்
அடியேன் அன்பு செய்வதுவே [12] [3904]

# இராமாநுச நூற்றந்தாதி

செய்யும் பசுந்துளபத் தொழில் மாலையும்
செந்தமிழில் பெய்யும்
மறைத் தமிழ் மாலையும்
பேராத சீர் அரங்கத் தையன் கழற்கணி அம் பரன் தாள் அன்றி
ஆதரியா மெய்யன்
இராமானுசன் சரணெ கதி வேறெனக்கே [13] [3905]

கதிக்குப் பதறி
வெம் கானமும் கல்லும் கடலும் எல்லாம்
கொதிக்கத் தவம் செய்யும் கொள்கைய் அற்றேன்
கொல்லி காவலன் சொல் பதிக்கும் கலைக் கவி பாடும் பெரியவர் பாதங்களே
துதிக்கும் பரமன்
இராமானுசன் என்னைச் சோர்விலனே [14] [3906]

சோராத காதல் பெருஞ்சுழிப்பால்
தொல்லை மாலை ஒன்றும் பாராதவனைப்
பல்லாண்டென்று காப்பிடும்
பான்மையன் தாள் பேராத உள்ளத்து இராமானுசன் தன் பிறங்கிய சீர்
சாரா மனிசரைச் சேரேன்
எனக்கென்ன தாழ்வினியே [15] [3907]

***தாழ்வொன்றில்லா மறை தாழ்ந்து***
***தலமுழுதும் கலியே ஆள்கின்ற நாள் வந்து***
***அளித்தவன் காண்மின்***
***அரங்கர் மௌலி சூழ்கின்ற மாலையைச் சூடிக் கொடுத்தவள் தொல்***
***வாழ்கின்ற வள்ளல்*** [ ***அருளால்***
***இராமானுசன் என்னும் மா முனியே*** [16] [3908]

முனியார் துயரங்கள் முந்திலும்
இன்பங்கள் மொய்த்திடினும் கனியார் மனம்
கண்ண மங்கை நின்றானைக்
கலை பரவும் தனியானையைத் தண்டமிழ் செய்த நீலன் தனக்கு
உலகில் இனியானை
எங்கள் இராமானுசனை வந்து எய்தினரே [17] [3909]

எய்தற்கு அரிய மறைகளை
ஆயிரம் இன் தமிழால் செய்தற்கு உலகில் வரும்
சடகோபனைச்
சிந்தையுள்ளே பெய்தற்கு இசையும் பெரியவர் சீரை உயிர்கள் எல்லாம்
உய்தற்கு உதவும்
இராமானுசன் எம் உறு துணையே [18] [3910]

# இராமாநுச நூற்றந்தாதி

உறு பெருஞ்செல்வமும்
தந்தையும் தாயும்
உயர் குருவும் வெறி தரு பூமகள் நாதனும்
மாறன் விளங்கிய சீர் நெறி தரும் செந்தமிழ் ஆரணமெ என்றி நீள் நிலத்தோர்
அறிதர நின்ற
இராமானுசன் எனக்கு ஆரமுதே [19] [3911]

ஆரப் பொழில் தென் குருகைப் பிரான்
அமுதத் திருவாய் ஈரத் தமிழின்
இசை உணர்ந்தோர்கட்கு
இனியவர் தம் சீரைப் பயின்றுய்யும் சீலங்கொள் நாதமுனியை
நெஞ்சால் வாரிப் பருகும்
இராமானுசன் என்றன் மா நிதியே [20] [3912]

நிதியைப் பொழியும் முகில் என்று
நீசர் தம் வாசல் பற்றித் துதி கற்றுலகில்
துவள்கின்றிலேன் இனி
தூய் நெறி சேர் எதிகட்கு இறைவன் யமுனைத் துறைவன் இணை அடியாம்
கதி பெற்றுடைய
இராமானுசன் என்னைக் காத்தனனே [21] [3913]

கார்த்திகை யானும் கரிமுகத் தானும்
கனலும் முக்கண் மூர்த்தியும்
மோடியும் வெப்பும் முதுகிட்டு
மூவுலகும் பூத்தவனே என்று போற்றிட வாணன் பிழை பொறுத்த
தீர்த்தனை ஏத்தும்
இராமானுசன் என்றன் சேம வைப்பே [22] [3914]

வைப்பாய வான் பொருள் என்று
நல் அன்பர் மனத்தகத்தே
எப்போதும் வைக்கும் இராமானுசனை
இரு நிலத்தில் ஒப்பார் இலாத உறுவினையேன் வஞ்ச நெஞ்சில் வைத்து
முப்போதும் வாழ்த்துவன்
என்னாம் இது அவன் மொய் புகழ்க்கே [23] [3915]

மொய்த்த வெந்தீவினையால் பல்லுடல் தொறும் முத்து
அதனால் எய்த்தொழிந்தேன்
முனை நாள்கள் எல் லாம்
இன்று கண்டுயர்ந்தேன் பொய்த் தவம் போற்றும் புலைச் சமயங்கள்
கைத்த மெய்ஞ்ஞானத்து [ நிலத்தவியக்
இராமானுசன் என்னும் கார்தன்னையே [24] [3916]

# இராமாநுச நூற்றந்தாதி

காரேய் கருணை இராமானுச
இக்கடல் இடத்தில் ஆரே அறிபவர்
நின் அருளின் தன்மை
அல்லலுக்கு நேரே உறைவிடம் நான் வந்து நீ என்னை உய்த்தபின்
உன் சீரே உயிர்க்கு உயிராய்
அடியேற்கு இன்று தித்திக்குமே [25] [3917]

திக்குற்ற கீர்த்தி இராமானுசனை
என் செய் வினையாம் மெய்க் குற்றம் நீக்கி
விளங்கிய மேகத்தை
மேவு நல்லோர் எக்குற்ற வாளர் எது பிறப்பேது இயல்வாக நின்றோர்
அக்குற்றம் அப்பிறப்பு
அவ்வியல்வே நம்மை ஆட்கொள்ளுமே [26] [3918]

கொள்ளக் குறைவற்றிலங்கிக்
கொழுந்து விட்டோங்கிய உன் வள்ளல் தனத்தினால்
வல்வினையேன் மனம் நீ புகுந்தாய்
வெள்ளைச் சுடர் விடும் உன் பெருமேன்மைக்கு இழுக்கிதென்று
தள்ளுற்று இரங்கும்
இராமானுச என் தனி நெஞ்சமே [27] [3919]

நெஞ்சில் கறைகொண்ட கஞ்சனைக் காய்ந்த நிமலன்
நங்கள் பஞ்சித் திருவடிப்
பின்னை தன் காதலன்
பாதம் நண்ணா வஞ்சர்க்கரிய இராமானுசன் புகழ் அன்றி என் வாய்
கொஞ்சிப் பரவகில்லாது
என்ன வாழ்வின்று கூடியதே [28] [3920]

கூட்டும் விதி என்று கூடுங்கொலோ
தென் குருகைப் பிரான் பாட்டென்னும்
வேதப் பசுந்தமிழ் தன்னைத்
தன் பத்தி என்னும் வேட்டிண் கண் வைத்த இராமானுசன் புகழ் மெய்
ஈட்டங்கள் தன்னை [ உணர்ந்தோர்
என் நாட்டங்கள் கண்டு இன்பம் எய்திடவே [29] [3921]

இன்பன் தரு பெரு வீடு வந்தெய்தில் என்
எண் இறந்த துன்பம் தரு
நிரயம் பல சூழில் என்
தொல் உலகில் மன் பல் உயிர்கட்கு இறையவன் மாயன் என மொழிந்த
அன்பன் அனகன்
இராமானுசன் என்னை ஆண்டனனே [30] [3922]

# இராமாநுச நூற்றந்தாதி

***ஆண்டுகள் நாள் திங்களாய்***
***நிகழ் காலம் எல்லாம் மனமே ஈன்டு***
***பல் யோனிகள் தோறுழல்வோம்***
***இன்றோர் எண் இன்றியே காண் தகு தோள் அண்ணல் தென் அத்தி ஊரர்***
***பூண்ட அன்ப்பாளன்*** [ ***கழல் இணைக்கீழ்ப்***
***இராமானுசனைப் பொருந்தினமே*** [31] [3923]

பொருந்திய தேசும் பொறையும் திறலும் புகழும்
நல்ல திருந்திய ஞானமும்
செல்வமும் சேரும்
செறு கலியால் வருந்திய ஞாலத்தை வண்மையினால்
வந்து எடுத்து அளித்த அருந்தவன்
எங்கள் இராமானுசனை அடைபவர்க்கே [32] [3924]

அடையார் கமலத்து அலர்மகள் கேள்வன்
கை ஆழி என்னும் படையொடு நாந்தகமும்
படர் தண்டும்
ஒண் சார்ங்க வில்லும் புடை ஆர் புரி சங்கமும்
இந்தப் பூதலம் காப்பதற்கென்று இடையே
இராமானுச முனி ஆயின இந்நிலத்தே [33] [3925]

நிலத்தைச் செறுத்துண்ணும் நீசக் கலியை
நினைப்பரிய பலத்தைச் செறுத்தும்
பிறங்கியதில்லை
என் பெய் வினை தென் புலத்தில் பொறித்தவப் புத்தகச் சும்மை பொறுக்கிய
நலத்தைப் பொறுத்தது [ பின்
ராமானுசன் தன் நயப் புகழே [34] [3926]

நயவேன் ஒரு தெய்வம் நானிலத்தே
சில மானிடத்தைப் புயலே எனக்
கவி போற்றி செய்யேன்
பொன் அரங்கம் என்னில் மயலே பெருகும் இராமானுசன்
மன்னு மா மலர்த்தாள் அயரேன்
அருவினை என்னை எவ்வாறு இன்றடர்ப்பு அதுவே [35] [3927]

அடல் கொண்ட நேமியன் ஆருயிர் நாதன்
அன்றாரணச் சொல் கடல் கொண்ட ஒன் பொருள்
கண்டளிப்பப்
பின்னும் காசினியோர் இடரிங்கண் வீழ்ந்திடத் தானும் அவ் ஒண்பொருள்
அவர் பின் படரும் குணன் [ கொண்டு
எம் இராமானுசன் தன் படி இதுவே [36] [3928]

# இராமாநுச நூற்றந்தாதி

படி கொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் பத்தி வெள்ளம்
குடிகொண்ட கோயில்
இராமானுசன் குணம் கூறும்
அன்பர் கடி கொண்ட மா மாலர்த் தாள் கலந்து உள்ளம் கனியும் நல்லோர்
அடி கண்டு கொண்டு உகந்து
என்னையும் ஆளவர்க்கு ஆக்கினரே [37] [3929]

ஆக்கி அடிமை நிலைப்பித்தனை
என்னை இன்று அவமே போக்கிப்
புறத்திட்டு என் பொருளா முன்பு
புண்ணியர் தம் வாக்கில் பிரியா இராமானுச நின் அருளின் வண்ணம்
நோக்கில் தெரிவரிதால்
உரையாய் இந்த நுண் பொருளே [38] [3930]

பொருளும் புதல்வரும் பூமியும்
பூங்குழலாரும் என்றே
மருள் கொண்டு இளைக்கும் நமக்கு நெஞ்சே
மற்றுளார் தரமோ இருள் கோண்ட வெந் துயர் மாற்றித் தன் ஈறில் பெரும்
தெருளும் தெருள் தந்து [ புகழே
இராமானுசன் செய்யும் சேமங்களே [39] [3931]

சேம நல் வீடும் பொருளும் தருமமும்
சீரிய நற் காமமும்
என்றிவை நான்கென்பர்
நான்கினும் கண்ணனுக்கே ஆமது காமம் அறம் பொருள் வீடுதற்கு
வாமனன் சீலன் [ என்றுரைத்தான்
இராமானுசன் இந்த மண்மிசையே [40] [3932]

மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து
எங்கள் மாதவனே கண்ணுற நிற்கிலும்
காணகில்லா
உலகோர்கள் எல்லாம் அண்ணல் இராமானுசன் வந்து தோன்றிய
நண்ணரு ஞானம் தலைக்கொண்டு [ அப்பொழுதே
நாரணற்கு ஆயினரே [41] [3933]

ஆயிழையார் கொங்கை தங்கும்
அக் காதல் அளற்றழுந்தி மாயும் என் ஆவியை
வந்தெடுத்தான் இன்று
மா மலராள் நாயகன் எல்லா உயிர்கட்கும் நாதன்
அரங்கன் என்னும் தூயவன்
தீதில் இராமானுசன் தொல் அருள் சுரந்தே [42] [3934]

# இராமாநுச நூற்றந்தாதி

சுரக்கும் திருவும் உணர்வும்
சொலப்புகில் வாய் அமுதம் பரக்கும்
இரு வினை பற்றற ஓடும்
படியில் உள்ளீர் உரைக்கின்றனன் உமக்கு யான் அறம் சீறும் உறு கலியை
துரக்கும் பெருமை
இராமானுசன் என்று சொல்லுமினே [43] [3935]

சொல்லார் தமிழ் ஒரு மூன்றும்
சுருதிகள் நாங்கும் எல்லை இல்லா
அறநெறி யாவும் தெரிந்தவன்
எண் அரும் சீர் நல்லார் பரவும் இராமானுசன் திருநாமம் நம்பிக்
கல்லார் அகல் இடத்தோர்
எது பேறென்று காமிப்பரே [44] [3936]

பேறொன்று மற்றில்லை நின் சரண் அன்றி
அப் பேறளித்தற்கு ஆறொன்றும் இல்லை
மற்றச் சரண் அன்றி
என்றிப் பொருளைத் தேறும் அவர்க்கும் எனக்கும் உனைத் தந்த செம்மை
கூறும் பரமன்று [ சொல்லால்
ராமானுச மெய்ம்மை கூறிடிலே [45] [3937]

கூறும் சமயங்கள் ஆறும் குலைய
குவலயத்தே மாறன் பணித்த
மரை உணர்ந்தோனை
மதியிலியேன் தேறும் படி என் மனம் புகுந்தானை
திசை அனைத்தும் ஏறும் குணனை
இராமானுசனை இறைஞ்சினமே [46] [3938]

இறைஞ்சப் படும் பரன் ஈசன் அரங்கன் என்று
இவ்வுலகத்து அறம் செப்பும்
அண்ணல் இராமானுசன்
என் அருவினையின் திறம் செற்று இரவும் பகலும் விடாதென்றன்
நிறைந்து ஒப்பற இருந்தான் [ சிந்தையுள்ளே
எனக்காரும் நிகர் இல்லையே [47] [3939]

நிகர் இன்றி நின்ற என் நீசதைக்கு
நின் அருளிங்கண் அன்றிப் புகல் ஒன்றும் இல்லை
அருட்கும் அஃதே புகல்
புன்மையிலோர் பகரும் பெருமை இராமானுச இனி நாம் பழுதே
அகலும் பொருள் என்
பயன் இருவோமுக்கும் ஆன பின்னே [48] [3940]

# இராமாநுச நூற்றந்தாதி

ஆனது செம்மை அறநெறி
பொய்ம்மை அறு சமயம் போனது பொன்றி
இறந்தது வெம் கலி
பூங்கமலத் தேன் நதி பாய் வயல் தென் அரங்கன் கழல் சென்னி வைத்துத்
தான் அதில் மன்னும்
இராமானுசன் இத்தலத்து உதித்தே [49] [3941]

உதிப்பன உத்தமர் சிந்தையுள்
ஒன்னலர் நெஞ்சம் அஞ்சிக் கொதித்திட
மாறி நடப்பன
கொள்ளை வன் குற்றம் எல்லாம் பதித்த என் புன் கவிப் பாவினம் பூண்டன
எதித் தலை நாதன் [ பாவு தொல் சீர்
இராமானுசன் தன் இணை அடியே [50] [3942]

அடியைத் தொடர்ந்தெழும் ஐவர்கட்காய்
அன்று பாரதப் போர் முடியப்
பரி நெடுந்தேர் விடும் கோனை
முழுதுணர்ந்த அடியர்க்கமுதம் இராமானுசன் என்னை ஆள வந்து
இப்படியில் பிறந்தது
மற்றில்லை காரணம் பார்த்திடிலே [51] [3943]

பார்த்தான் அறு சமயங்கள் பதைப்ப
இப்பார் முழுதும் போர்த்தான் புகழ் கொண்டு
புன்மையின் ஏனிடைத்தான் புகுந்து
தீர்த்தான் இரு வினை தீர்த்து
அரங்கன் செய்ய தாள் இணையோடு ஆர்த்தான்
இவை எம் இராமானுசன் செய்யும் அற்புதமே [52] [3944]

அற்புதன் செம்மை இராமானுசன்
என்னை ஆள வந்த கற்பகம் கற்றவர்
காமுறு சீலன்
கருதரிய பற்பல் உயிர்களும் பல் உலகு யாவும் பரனதென்னும்
நற்பொருள் தன்னை
இந் நானிலத்தே வந்து நாட்டினனே [53] [3945]

நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன
நாரணனைக் காட்டிய வேதம்
களிப்புற்றது
தென் குருகை வள்ளல் வாட்டம் இலா வண் தமிழ் மறை வாழ்ந்தது
மண்ணுலகில் ஈட்டிய சீலத்து
இராமானுசன் தன் இயல்வு கண்டே [54] [3946]

# இராமாநுச நூற்றந்தாதி

கண்டவர் சிந்தை கவரும்
கடி பொழில் தென் அரங்கன்
தொண்டர் குலாவும் இராமானுசனை
தொகை இறந்த பண் தரு வேதங்கள் பார்மேல் நிலவிடப் பார்த்தருளும்
கொண்டலை மேவித் தொழும்
குடியாம் எங்கள் கோக்குடியே [55] [3947]

கோக் குல மன்னரை மூவெழு கால்
ஒரு கூர்மழுவால் போக்கிய தேவனைப்
போற்றும் புனிதன்
புவனம் எங்கும் ஆக்கிய கீர்த்தி இராமானுசனை அடைந்த பின்
என் வாக்கு உரையாது
என் மனம் நினையாது இனி மற்றொன்றையே [56] [3948]

மற்றொரு பேறு மதியாது
அரங்கன் மலர் அடிக்காள் உற்றவரே
தனக்கு உற்றவராய்க் கொள்ளும் உத்தமனை
நற்றவர் போற்றும் இராமானுசனை
இந் நானிலத்தே பெற்றனன்
பெற்றபின் மற்று அறியேன் ஒரு பேதைமையே [57] [3949]

பேதையர் வேதப் பொரு இதென்று உன்னி
பிரமம் நன்றென்று ஓதி
மற்றெல்லா உயிரும் அஃதென்று
உயிர்கள் மெய்விட்டு ஆதிப் பரனொடு ஒன்றாமென்று சொல்லும்
வாதில் வென்றான் [ அவ்வல்லல் எல்லாம்
எம் இராமானுசன் மெய்ம் மதிக்கடலே [58] [3950]

கடல் அளவாய திசை எட்டினுள்ளும்
கலி இருளே மிடைதரு காலத்து இராமானுசன்
மிக்க நான்மறையின் சுடர் ஒளியால் அவ்விருளைத் துரத்திலனேல்
உயிரை உடையவன்
நாரணன் என்று அறிவார் இல்லை உற்றுணர்ந்தே [59] [3951]

உணர்ந்த மெய்ஞ் ஞானியர் யோகம் தொறும்
திருவாய் மொழியின் மணம் தரும்
இன்னிசை மன்னும் இடந்தொறும்
மாமலராள் புணர்ந்த பொன் மார்பன் பொருந்தும் பதிதொறும் புக்குநிற்கும்
குணம் திகழ் கொண்டல்
இராமானுசன் எம் குலக் கொழுந்தே [60] [3952]

# இராமானுச நூற்றந்தாதி

கொழுந்து விட்டோடிப் படரும் வெங்கோள் வினையால்
நிரயத்து அழுந்தியிட்டேனை
வந்து ஆட்கொண்ட பின்னும்
அரு முனிவர் தொழும் தவத்தோன் எம் இராமானுசன்
தொல் புகழ் சுடர்மிக்கு எழுந்தது
அத்தால் நல் அதிசயம் கண்ட திருநிலமே [61] [3953]

இருந்தேன் இரு வினைப் பாசம் கழற்றி
இன்று யான் இறையும் வருந்தேன்
இனி எம் இராமானுசன்
மன்னு மாமலர்த்தாள் பொருந்தா நிலை உடைப் புன்மையினோர்க்கு ஒன்றும்
பெருந்தேவரைப் பரவும் [ நன்மை செய்யா
பெரியோர் தம் கழல் பிடித்தே [62] [3954]

பிடியைத் தொடரும் களிறென்ன
யான் உன் பிறங்கிய சீர் அடியைத் தொடரும் படி
நல்க வேண்டும்
அறு சமயச் செடியைத் தொடரும் மருள் செறிந்தோர் சிதைந்தோட வந்து
இப்படியைத் தொடரும்
இராமானுச மிக்க பண்டிதனே [63] [3955]

பண் தரு மாறன் பசுந்தமிழ்
ஆனந்தம் பாய் மதமாய் விண்டிட
எங்கள் இராமானுச முனி வேழம்
மெய்ம்மை கொண்ட நல் வேதக் கொழுந்தண்டம் ஏந்திக் குவலயத்தே
மண்டி வந்தேன்றது
வாதியர்காள் உங்கள் வாழ்வற்றதே [64] [3956]

வாழ்வற்றது தொல்லை வாதியர்க்கு
என்றும் மறையவர் தம் தாழ்வற்றது
தவம் தாரணி பெற்றது
தத்துவ நூல் கூழ் அற்றது குற்றம் எல்லாம் பதித்த குணத்தினர்க்கு
அந் நாழற்றது
நம் இராமானுசன் தந்த ஞானத்திலே [65] [3957]

ஞானம் கனிந்த நலம் கொண்டு
நாள் தொரும் நைபவர்க்கு
வானம் கொடுப்பது மாதவன்
வல்வினையேன் மனத்தில் ஈனம் கடிந்த இராமானுசன் தன்னை
அத்தானம் கொடுப்பது [ எய்தினர்க்கு
தன் தகவென்னும் சரண் கொடுத்தே [66] [3958]

# இராமாநுச நூற்றந்தாதி

சரணம் அடைந்த தருமனுக்கா
பண்டு நூற்றுவரை
மரணம் அடைவித்த மாயவன்
தன்னை வணங்க வைத்த கரணம் இவை உமக்கன்று என்றி ராமானுசன்
உயிர்கட்கு அரண் அங்கு அமைத்திலனேல்
அரணார் மற்று இவ்வாருயிர்க்கே [67] [3959]

ஆர் எனக்கின்று நிகர் சொல்லில்
மாயன் அன்று ஐவர்தெய்வத் தேரினில்
செப்பிய கீதையின்
செம்மைப் பொருள் தெரியப் பாரினில் சொன்ன இராமானுசனை பணியும்
சீரினில் சென்று பணிந்தது [ நல்லோர்
என் ஆவியும் சிந்தையுமே [68] [3960]

சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து
முன்னாள் அந்தம் உற்றாழ்ந்தது கண்டு
அவை என்தனக்கு அன்றருளால்
தந்த அரங்கனும் தண் சரண் தந்திலன்
தான் அது தந்து
எந்தை இராமானுசன் வந்தெடுத்தனன் இன்றென்னையே [69] [3961]

என்னையும் பார்த்தென் இயலையும் பார்த்து
எண்ணில் பல் குணத்த உன்னையும் பார்க்கில்
அருள் செய்வதே நலம்
அன்றி யென்பால் பின்னையும் பார்க்கில் நலம் உளதே உன் பெரும் கருணை
தன்னை என் பார்ப்பர்
இராமானுச உன்னைச் சார்ந்தவரே [70] [3962]

சார்ந்ததென் சிந்தை உன் தாள் இணைக்கீழ்
அன்பு தான் மிகவும் கூர்ந்தது
அத் தாமரைத் தாள்களுக்கு
உன் தன் குணங்களுக்கே தீர்ந்ததென் செய்கை முன் செய்வினை நீ
செய்வினை அதனால் பேர்ந்தது
வண்மை இராமானுச எம் பெருந்தகையே [71] [3963]

கைத்தனன் தீய சமயக் கலகரை
காசினிக்கே உய்த்தனன்
தூய மறைநெறி தன்னை
என்றுன்னி உள்ளம் நெய்த்தவன் போடிருந்தேத்தும் நிறை புகழோருடனே
வைத்தனன் என்னை
இராமானுசன் மிக்க வண்மை செய்தே [72] [3964]

# இராமானுச நூற்றந்தாதி

வண்மையினாலும் தன் மா தகவாலும்
மதி புரையும் தண்மையினாலும்
இத் தாரணியோர்கட்குத்
தான் சரணாய் உண்மை நல் ஞானம் உரைத்த இராமானுசனை உன்னும்
திண்மை அல்லால் எனக்கில்லை
மற்றோர் நிலை தேர்ந்திடிலே [73] [3965]

தேரார் மறையின் திறம் என்று
மாயவன் தீயவரைக்
கூராழி கொண்டு குறைப்பது
கொண்டல் அனைய வண்மை ஏரார் குணத்து எம் இராமானுசன்
அவ்வெழில் மறையில் சேராதவரைச் சிதைப்பது
அப்போது ஒரு சிந்தை செய்தே [74] [3966]

செய்த்தலைச் சங்கம் செழு முத்தம் ஈனும்
திருவரங்கர் கைத்தலது தாழியும்
சங்கமும் ஏந்தி
நம் கண் முகப்பே மெய்த்தலைத்து உன்னை விடேன் என்று இருக்கிலும் நின்
மொய்த்தலைக்கும் வந்து [ புகழே
இராமானுச என்னை முற்றும் நின்றே [75] [3967]

***நின்ற வண் கீர்த்தியும் நீள் புனலும்***
***நிறை வேங்கடப் பொன் குன்றமும்***
***வைகுந்த நாடும் குலவிய பாற்கடலும்***
***உன் தனக்கு எத்தனை இன்பம் தரும் உன் இணைமலர்த்தாள்***
***என் தனக்கும் அது***
***இராமானுச இவை ஈந்தருளே*** [76] [3968]

ஈந்தனன் ஈயாத இன்னருள்
எண்ணில் மறைக் குறும்பைப் பாய்ந்தனன்
அம்மறைப் பல் பொருளால்
இப் படி அனைத்தும் ஏய்ந்தனன் கீர்த்தியினால் என் வினைகளை
வேர் பறியக் காய்ந்தனன்
வண்மை இராமானுசற்கு என் கருத்தினியே [77] [3969]

கருத்தில் புகுந்து உள்ளில் கள்ளம் கழற்றி
கருதரிய வருத்தத்தினால்
மிக வஞ்சித்து
நீ இந்த மண்ணகத்தே திருத்தித் திருமகள் கேள்வனுக்கு ஆக்கிய பின்
என் நெஞ்சில் பொருத்தப் படாது
எம் இராமானுச மற்றோர் பொய்ப் பொருளே [78] [3970]

# இராமானுச நூற்றந்தாதி

பொய்யைச் சுரக்கும் பொருளைத் துறந்து
இந்தப் பூதலத்தே மெய்யைப் புரக்கும்
இராமானுசன் நிற்க
வேறு நம்மை உய்யக் கொள வல்ல தெய்வம் இங்கு யாதென்று
ஐயப்படா நிற்பர் [ உலர்ந்தவமே
வையத்துள்ளோர் நல்லறிவு இழந்தே [79] [3971]

நல்லார் பரவும் இராமானுசன்
திருநாமம் நம்ப வல்லார் திறத்தை
மறவாதவர்கள் எவர்
அவர்க்கே எல்லா இடத்திலும் என்றும் எப்போதிலும் எத் தொழும்பும்
சொல்லால் மனத்தால்
கருமத்தினால் செய்வன் சோர்வின்றியே [80] [3972]

சோர்வின்றி உந் தன் துணை அடிக் கீழ்
தொண்டு பட்டவர்பால்
சார்வின்றி நின்ற எனக்கு
அரங்கன் செய்ய தாள் இணைகள் பேர்வின்றி இன்று பெறுத்தும் இராமானுச
இனி உன் சீர் ஒன்றிய கருணைக்கு
இல்லை மாறு தெரிவுறிலே [81] [3973]

தெரிவுற்ற ஞாலம் செறியப் பெறாது
வெந் தீவினையால் உருவற்ற ஞானத்து
உழல்கின்ற என்னை
ஒரு பொழுதில் பொருவற்ற கேள்வியன் ஆக்கி நின்றான் என்ன
தெரிவுற்ற கீர்த்தி [ புண்ணியனோ
இராமானுசன் என்னும் சீர் முகிலே [82] [3974]

சீர் கொண்டு பேரறம் செய்து
நல் வீடு செறிதும் என்னும்
பார் கொண்ட மேன்மையர் கூட்டன் அல்லேன்
உன் பத யுகமாம் ஏர் கொண்ட வீட்டை எளிதினில் எய்துவன்
உன்னுடைய கார் கொண்ட வண்மை
இராமானுச இது கண்டு கொள்ளே [83] [3975]

கண்டு கொண்டேன் எம் இராமானுசன் தன்னை
காண்டலுமே தொண்டு கொண்டேன்
அவன் தொண்டர் பொற்றாளில்
என் தொல்லை வெந்நோய் விண்டு கொண்டேன் அவன் சீர் வெள்ள வாரியை
இன்று உண்டு கொண்டேன் [ வாய்மடுத்து
இன்னம் உற்றன ஓதில் உலப்பில்லையே [84] [3976]

# இராமாநுச நூற்றந்தாதி

ஓதிய வேதத்தின் உட்பொருளாய்
அதன் உச்சி மிக்க சோதியை
நாதன் என அறியாது உழல்கின்ற தொண்டர்
பேதைமை தீர்த்த இராமானுசனைத் தொழும் பெரியோர்
பாதம் அல்லால் என் தன் ஆர் உயிர்க்கு
யாதொன்றும் பற்றில்லையே [85] [3977]

பற்றா மனிசரைப் பற்றி
அப்பற்று விடாதவரே உற்றார் என உழன்று
ஓடி நையேன் இனி
ஒள்ளிய நூல் கற்றார் பரவும் இராமானுசனை
கருதும் உள்ளம் பெற்றார் எவர்
அவர் எம்மை நின்றாளும் பெரியவரே [86] [3978]

பெரியவர் பேசிலும் பேதையர் பேசிலும்
தன் குணங்கட்கு உரியசொல் என்றும்
உடையவன் என்றென்று
உணர்வில் மிக்கோர் தெரியும் வண் கீர்த்தி இராமானுசன்
மறை தேர்ந்துலகில் புரியும் நல் ஞானம்
பொருந்தாதவரைப் பொரும் கலியே [87] [3979]

கலி மிக்க செந்நெல் கழனிக் குறையல்
கலைப் பெருமான் ஒலிமிக்க பாடலை உண்டு
தன் உள்ளம் தடித்து
அதனால் வலி மிக்க சீயம் இராமானுசன் மறை வாதியராம்
புலி மிக்கது என்று
இப்புவனத்தில் வந்தமை போற்றுவனே [88] [3980]

போற்றரும் சீலத்து இராமானுச
நின் புகழ் தெரிந்து சாற்றுவனேல்
அது தாழ்வது தீரில்
உன் சீர் தனக்கோர் ஏற்றம் என்றே கொண்டிருக்கிலும்
என் மனம் ஏத்தி அன்றி ஆற்றகில்லாது
இதற்கு என் நினைவாய் என்றிட்டு அஞ்சுவனே [89] [3981]

நினையார் பிறவியை நீக்கும் பிரானை
இந் நீள் நிலத்தே எனை ஆள வந்த இராமானுசனை
இருங்கவிகள் புனையார் புனையும் பெரியவர் தாள்களில்
பூந்தொடையல் வனையார்
பிறப்பில் வருந்துவர் மாந்தர் மருள் சுரந்தே [90] [3982]

# இராமானுச நூற்றந்தாதி

மருள் சுரந்தாகம வாதியர் கூறும்
அவப் பொருளாம் இருள் சுரந்தெய்த்த
உலகிருள் நீங்கத்
தன் ஈண்டிய சீர் அருள் சுரந்து எல்லா உயிர்கட்கும் நாதன்
அரங்கன் என்னும் பொருள் சுரந்தான்
எம் இராமானுசன் மிக்க புண்ணியனே [91] [3983]

புண்ணிய நோன்பு புரிந்தும் இலேன்
அடி போற்றி செய்யும் நுண் அரும் கேள்வி
நுவன்றும் இலேன்
செம்மை நூற்புலவர்க்கு எண் அரும் கீர்த்தி இராமானுச
இன்று நீ புகுந்தென் கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும்
நின்ற இக் காரணம் கட்டுரையே [92] [3984]

கட்டப் பொருளை மறைப்பொருள் என்று
கயவர் சொல்லும் பெட்டைக் கெடுக்கும்
பிரன் அல்லனே
என் பெரு வினையைக் கிட்டிக் கிழங்கொடு தன் அருள் என்னும் ஒள் வாள்
வெட்டிக் களைந்த [ உருவி
இராமானுசன் என்னும் மெய்த்தவனே [93] [3985]

தவம் தரும் செல்வம் தகவும் தரும்
சலியாப் பிறவிப் பவம் தரும்
தீவினை பாற்றித் தரும்
பரந்தாமம் என்னும் திவம் தரும் தீதில் இராமானுசன் தன்னைச்
உவந்தருந்தேன் [ சார்ந்தவர்கட்கு
அவன் சீர் அன்றி யான் ஒன்றும் உள் மகிழ்ந்தே [94] [3986]

உள் நின்று உயிர்களுக்கு உற்றனவே செய்து
அவர்க்குயவே பண்ணும் பரனும்
பரிவிலநாம் படி
பல் உயிர்க்கும் விண்ணின் தலை நின்று வீடளிப்பான் எம் இராமானுசன்
மண்ணின் தலத்து உதித்து
உய்மறை நாலும் வளர்த்தனனே [95] [3987]

வளரும் பிணிகொண்ட வல்வினையால்
மிக்க நல்வினையில்
கிளரும் துணிவு கிடைத்தறியாது
முடைத்தலை ஊன் தளரும் அளவும் தரித்தும் விழுந்தும் தனி திரிவேற்கு
உளர் எம் இறைவர்
இராமானுசன் தன்னை உற்றவரே [96] [3988]

# இராமாநுச நூற்றந்தாதி

தன்னை உற்றாட் செய்யும் தன்மையினோர்
மன்னு தாமரைத் தாள் தன்னை உற்றாட் செய்ய
என்னை உற்றான் இன்று
தன் தகவால் தன்னை உற்றார் அன்றித் தன்மை உற்றார் இல்லை என்றறிந்து
தன்னை உற்றாரை
இராமானுசன் குணம் சாற்றிடுமே [97] [3989]

***இடுமே இனிய சுவர்க்கத்தில்***
***இன்னும் நரகில் இட்டுச் சுடுமே அவற்றை***
***தொடர் தரு தொல்லை***
***சுழல் பிறப்பில் நடுமே இனி நம் இராமானுசன் நம்மை நம் வசத்தே***
***விடுமே சரணம் என்றால்***
***மனமே நையல் மேவுதற்கே*** [98] [3990]

தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும்
தாழ்சடையோன் சொல் கற்ற சோம்பரும்
சூனிய வாதரும்
நான்மறையும் நிற்கக் குறும்பு செய் நீசரும் மாண்டனர்
நீள் நிலத்தே பொன் கற்பகம்
எம் இராமானுச முனி போந்த பின்னே [99] [3991]

போந்ததென் நெஞ்சென்னும் பொன் வண்டு
உனதடிப் போதில் ஒண் சீர் ஆந் தெளி தேன் உண்டு
அமர்ந்திட வேண்டி,
நின்பால் அதுவே ஈந்திட வேண்டும் இராமானுச
இது அன்றி ஒன்றும் மாந்தகில்லாது
இனி மற்றொன்று காட்டி மயக்கிடலே [100] [3992]

மயக்கும் இரு வினை வல்லியில் பூண்டு
மதி மயங்கித் துயக்கும் பிறவியில்
தோன்றிய என்னைத்
துயர் அகற்றி உயக்கொண்டு நல்கும் இராமானுச என்றது உன்னை உன்னி
நயக்கும் அவர்க்கு இது இழுக்கென்பர்
நல்லவர் என்று நைந்தே [101] [3993]

நையும் மனம் உன் குணங்களை உன்னி
என் நா இருந்தெம் ஐயன் இராமானுசன்
என்று அழைக்கும்
அருவினையேன் கையும் தொழும் கண் கருதிடும் காணக் கடல் புடை சூழ்
வையம் இதனில்
உன் வண்மை என்பால் என் வளர்ந்ததுவே [102] [3994]

# இராமாநுச நூற்றந்தாதி

வளர்ந்த வெம் கோப மடங்கல் ஒன்றாய்
அன்று வாள் அவுணன் கிளர்ந்த
பொன் ஆகம் கிழித்தவன்
கீர்த்திப் பயிர் எழுந்து விளைந்திடும் சிந்தை இராமானுசன் என்றன் [ மெய்வினை நோய்
களைந்து நல் ஞானம் அளித்தனன்
கையில் கனி என்னவே [103] [3995]

கையில் கனி என்னக் கண்ணனைக் காட்டித் தரிலும்
உன் தன் மெய்யில் பிறங்கிய
சீரன்றி வேண்டிலன் யான்
நிரயத் தொய்யில் கிடக்கிலும் சோதி விண் சேரிலும் இவ்வருள் நீ
செய்யில் தரிப்பன்
இராமானுச என் செழுங்கொண்டலே [104] [3996]

செழுந்திரை பாற்கடல் கண் துயில் மாயன்
திருவடிக்கீழ் விழுந்திருப்பார் நெஞ்சில்
மேவு நல் ஞானி
நல் வேதியர்கள் தொழும் திருப் பாதன் இராமானுசனைத் தொழும் பெரியோர்
எழுந்திரைத்தாடும் இடம்
அடியேனுக்கு இருப்பிடமே [105] [3997]

***இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம்***
***மாலிருஞ்சோலை என்னும் பொருப்பிடம்***
***மாயனுக்கு என்பர் நல்லோர்***
***அவை தம்மொடும் வந்து இருப்பிடம் மாயன் இராமானுசன் மனத்து***
***இன்றவன் வந்து இருப்பிடம்***
***என்றன் இதயத்துள்ளே தனக்கு இன்புறவே*** [106] [3998]

***இன்புற்ற சீலத்து இராமானுச***
***என்றும் எவ்விடத்தும் என்புற்ற நோய்***
***உடல் தோறும் பிறந்திறந்து***
***எண் அரிய துன்புற்று வீயினும் சொல்லுவது ஒன்றுண்டு***
***உன் தொண்டர்கட்கே அன்புற்றிருக்கும் படி***
***என்னை ஆக்கி அங்கு ஆட்படுத்தே*** [107] [3999]

***அங்கயல் பாய் வயல் தென் அரங்கன்***
***அணி ஆகமன்னும் பங்கய மாமலர்***
***பாவையைப் போற்றுதும்***
***பத்தி எல்லாம் தங்கிய தென்னத் தழைத்து நெஞ்சே நம் தலைமிசையே***
***பொங்கிய கீர்த்தி***
***இராமானுசன் அடிப் பூ மன்னவே*** [108] [4000]